Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் .**

**திருவெண்ணெய்நல்லூர்.**

## CC.No. 28/2024

**2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ம் தேதி புதன்கிழமைகுற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 - வது நபரின் வாக்குமூலம் (1969-ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | காவல் ஆய்வாளர் |
| பெயர் | - | சிவக்குமார் | வட்டம் | - | மயிலாடுதுறை |
| த/பெ | - | அய்யாவு | சமயம் | - | |
| கிராமம் | - | மயிலாடுதுறை | வயது | - | 44 |

| | |
|---|---|
| நாள் ( Dated) : 28.01.2026 | |
| **நீதிமன்ற புள்ளி ( IN COURT POINT)** | |
| இடம் ( Venue) | -திறந்த நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர் |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | - தலைமை எழுத்தர், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர். |
| இந்த வழக்கில் வழக்கறிஞர்கள் | அரசுக்காக – திரு. ஐ. பாரூக் ஷா, பி.ஏ., எல்.எல்.எம்., அரசு உதவி வழக்கறிஞர், நிலை-2 |
| | எதிரிகளுக்காக திரு. எம்.எ. ஐயப்பன், வழக்கறிஞர், |
| **தொலைதூர புள்ளி (IN REMOTE POINT )** | |
| இடம் ( Venue) | காவல் நிலையம், மயிலாடுதுறை |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | திரு. சிவக்குமார்<br>காவல் ஆய்வாளர்,<br>மயிலாடுதுறை காவல்நிலையம் |
| சாட்சி ( Witness) | அசா.5 |

சாட்சி மயிலாடுதுறை காவல்நிலையத்திலிருந்து நீதிமன்ற காணொலி சாதனம் மூலம் விசாரணை செய்யப்படுகிறார்

**(2 , 3 எதிரிகள் ஆஜர் . 1வது எதிரி ஆஜரில்லை. 1வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது மயிலாடுதுறை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 21.03.2018 ந் தேதி 13.00 மணிக்கு அரகண்டநல்லூர் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது ஆற்காடு, ஒத்தவடை தெருவை சேர்ந்த பிச்சைக்காரன் மகன் முருகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப அரகண்டநல்லூர் நிலைய குற்ற எண்.230/2018 ச/பி. 294(பி), 447, 434, 323, 324, 506(2) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ. 3 ஆகும்.**

2. மேற்படி வழக்கை அன்றே எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 14.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பழனிச்சாமி மற்றும் கணேசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் மற்றும் வரைபடம் அசாஆ.4,5 ஆகும்**.

3. பின்பு சாட்சிகள் முருகன், பிச்சைக்காரன், வசந்தா, பழனிச்சாமி, கணேசன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரிகளை தேடிச்சென்றதில் 21.03.2018 ந் தேதி 15.00 மணிக்கு முகையூர் பஸ்டாப் அருகே எதிரி அய்யானாரை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு உட்டுபடுத்தினேன். இவ்வழக்கில் தொடர்புடைய மற்ற எதிரிகள் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணையில் சென்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை.

4. பின்னர் காயம்பட்ட அ.சா.1 -ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.ரேவதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றேன். **அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆகும்**. மருத்துவர் அளித்த மருத்துவ சான்றில் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என கருத்துரை வழங்கியுள்ளார். இத்துடன் எனது வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது ச/பி. 294(பி), 447, 434, 323, 324, 506(2) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**மறுவிசாரணை** - இல்லை

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.